செய்தி வெளியீடு எண். 93 நாள்: 10.02.2018

**சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் 481 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 58 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான திருமணத் உதவித் தொகையையும், தாலிக்கு 3848 கிராம் (481 சவரன்) தங்கத்தையும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினார்கள்**

திருவள்ளுர் மாவட்டம், திருத்தணி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் 481 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 58 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான திருமணத் உதவித் தொகையையும், தாலிக்கு 3848 கிராம் (481 சவரன்) தங்கத்தையும் இன்று (10.02.2018) வழங்கினார்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது "மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு செயல்படுத்தி வருகிறது. அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களில் விலையில்லா அரிசி, தாலிக்கு தங்கம் வழங்குதல், விலையில்லா கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டங்கள் ஏழை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கம் திட்டங்களாகும்.

ஏழை பெண்களின் திருமணத்திற்கு கொண்டுவரப்பட்ட திட்டத்தினால் 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு ரூ. 25 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ. 50 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், தமிழக அரசு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டமானது 23, மே 2016 முதல் தாலிக்கு 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இன்று திருத்தணி பகுதியில் 481 பயனாளிகளுக்கு 3848 கிராம் (481 சவரன்) தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.1 கோடியே 58 இலட்சத்தி 50 ஆயிரம் நிதியும் அரசு வழஙகுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் அரசாக விளங்குகிறது. இது மக்களின் நலனை மேம்படுத்துவதற்காகவும், வாழ்வில் உயர்ந்த இடத்தை அடைய செய்யும் அரசாக உள்ளது" இவ்வாறு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

“தமிழக அரசு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கென தனி கவனம் அளிக்கும் நோக்கத்தில் 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு ரூ. 25 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா கிராம் தங்கமும், பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.50 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 8 கிராம் தங்கமும் உயர்த்தி வழங்கி வருகிறது. இதனால் பெண்களின் கல்வி தரம் மற்றும் வாழ்வாதாரம் உயர்ந்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் 2011 முதல் இதுவரை 33,289 பயனாளிகளுக்கு, ரூ. 107 கோடியே 73 இலட்சத்தி 75 ஆயிரம் மதிப்பிலான நிதி கணக்கிலும், 147.736 கிலோகிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினை அனைத்து ஏழை எளிய மக்களும் பெற்றுக்கொண்டு பயனடைய வேண்டும்” என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், திருவள்ளூர்-காஞ்சிபுரம் ஆவின் பால் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்தலைவர் திரு.த.சந்திரன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திரு,ஜெயராமன், திருத்தணி வட்டாட்சியர் திரு.நரசிம்மன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர். முன்னதாக மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ச.மீனா அனைவரையும் வரவேற்று பேசினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**